CAREERINDIA

| Roll No. | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

**Serial No. of Q. C. A. B.**

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 63 ]
Total No. of Questions : 63 ]

[ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 24
[ Total No. of Printed Pages : 24

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10-T**

**Code No. : 10-T**

# ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು

# Subject : First Language — TAMIL

ದಿನಾಂಕ : 17. 06. 2014 ]
ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 9-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 12-45 ರವರೆಗೆ ]
ಪರಮಾವಧಿ ಅಂಕಗಳು : 125 ]

[ Date : 17. 06. 2014
[ Time : 9-30 A.M. to 12-45 P.M.
[ Max. Marks : 125

## FOR OFFICE USE ONLY

| Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | | 14. | | 27. | | 40. | | 53. | |
| 2. | | 15. | | 28. | | 41. | | 54. | |
| 3. | | 16. | | 29. | | 42. | | 55. | |
| 4. | | 17. | | 30. | | 43. | | 56. | |
| 5. | | 18. | | 31. | | 44. | | 57. | |
| 6. | | 19. | | 32. | | 45. | | 58. | |
| 7. | | 20. | | 33. | | 46. | | 59. | |
| 8. | | 21. | | 34. | | 47. | | 60. | |
| 9. | | 22. | | 35. | | 48. | | 61. | |
| 10. | | 23. | | 36. | | 49. | | 62. | |
| 11. | | 24. | | 37. | | 50. | | 63. | |
| 12. | | 25. | | 38. | | 51. | | × | |
| 13. | | 26. | | 39. | | 52. | | × | |

| | | | |
|---|---|---|---|
| | | ***Total Marks*** | |
| **Total Marks in words** | | **Grand Total** | |
| 1. ✓ | | | |
| 2. ✓ | | ✓ | ✓ |
| *Signature of Evaluators* | *Registration No.* | *Signature of the Deputy Chief* | *Signature of the Room Invigilator* |

www.careerindia.com

[ Turn over

CAREERINDIA



*மாணவர் கவனத்திற்கு :*

i) இது வினாத்தாளுடன் கூடிய விடைத்தாள்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளிக்கத் தேவையான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்டுள்ள அளவின்படியே விடைகளை எழுதவும்.

iii) இந்த வினாத்தாள் 'பொருத்துக' பிரிவையும் சேர்த்து மொத்தம் 63 வினாக்களைக் கொண்டுள்ளது.

iv) மாணாக்கர்கள் விடைகளை பென்சிலால் எழுதக்கூடாது. பென்சிலால் எழுதிய விடைகள் மதிப்பிடப்படமாட்டாது.

v) மாணாக்கர்களுக்கு வினாத்தாளைப் படிப்பதற்கென 15 நிமிடங்கள் கூடுதலாக தரப்பட்டுள்ளது.

கீழ்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் / முழுமைபெறாத கூற்றுகளுக்கும் ( Incomplete statements ) நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. மிகச் சரியான விடை என்று நீங்கள் கருதுபவற்றைத் தேர்ந்தெடுத்து அதன் கீழ் உள்ள விடைப் பகுதியில் விடையை குறியீட்டுடன் முழுவதுமாக எழுதவும் : $15 \times 1 = 15$

1. கண்ணதாசன் எம்மொழியில் இறைவன் புகழைச் சொல்கிறார் ?

(A) ஆங்கிலம்

(B) தமிழ்

(C) கன்னடம்

(D) தெலுங்கு.

*விடை :* ______________________

2. உயிரளபெடை எத்தனை வகைப்படும் ?

(A) 3

(B) 2

(C) 4

(D) 5.

*விடை :* ______________________

3. தமிழரசியின் மேகலையாக விளங்குவது

(A) குண்டலகேசி

(B) வளையாபதி

(C) சீவகசிந்தாமணி

(D) மணிமேகலை.

*விடை :* ______________________

www.careerindia.com

CAREERINDIA



4. ‘வெள்ளை அடித்தான்’ என்பது

(A) சினையாகு பெயர்

(B) தொழில் ஆகுபெயர்

(C) இடவாகு பெயர்

(D) பண்பாகு பெயர்.

*விடை :* ______________________

5. ‘நாடு வறங்கூரினும் இவ்வோடு வறங்கூராது’ என்று கூறியவர்

(A) ஆபுத்திரன்

(B) இந்திரன்

(C) சிந்தா விளக்கு

(D) அறவண அடிகள்.

*விடை :* ______________________

6. ‘வீசு தென்றல்’ என்பது

(A) உவமைத் தொகை

(B) வினைத் தொகை

(C) பண்புத் தொகை

(D) உம்மைத் தொகை.

*விடை :* ______________________

7. ‘‘தத்தா நமர்’ என்று தடுத்தவர்

(A) தத்தன்

(B) முத்தநாதன்

(C) மெய்ப்பொருள் நாயனார்

(D) அரசி.

*விடை :* ______________________



www.careerindia.com

CAREERINDIA



8. ''ஈசன் எந்தை இணையடி நீழலே'' — நிழலே என்பது நீழலே என நெடிலாய் விகாரப்பட்டது .................... விகாரம் ஆகும்.

(A) வலித்தல் விகாரம்

(B) மெலித்தல் விகாரம்

(C) நீட்டல் விகாரம்

(D) குறுக்கல் விகாரம்.

*விடை :* ______

9. 'சாணேற முழஞ்சறுக்குகிறதே. நான் என்ன செய்வேன் ?' என்று வருந்தியவர்

(A) அந்தணர்

(B) பிள்ளையவர்கள்

(C) மாணாக்கர்கள்

(D) அந்தணரின் மனைவி.

*விடை :* ______

10. 'பெரிய விடமே சேரும்' — எது ?

(A) வாழைப்பழம்

(B) எலுமிச்சம்பழம்

(C) மாம்பழம்

(D) பலாப்பழம்.

*விடை :* ______

11. ஆனந்தரங்கப் பிள்ளையின் நாட்குறிப்பு எத்தனை தொகுதிகளாக வெளிவந்துள்ளது ?

(A) 14

(B) 13

(C) 10

(D) 12.

*விடை :* ______

www.careerindia.com

CAREERINDIA



12. மூன்று சீர்களால் அமைந்த அடி

(A) குறளடி

(B) சிந்தடி

(C) நெடிலடி

(D) கழிநெடிலடி.

*விடை :* ______________________

13. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்

(A) எம். அரியல்

(B) லியோடால்ஸ்டாய்

(C) ஜி. யு. போப்

(D) ஆல்பர்ட் சுவைட்டர்.

*விடை :* ______________________

14. பின்வருவனவற்றுள் இனமில்லாச் சொல் எது ?

தாடி, தொப்பி, மீசை, வயிறு

(A) தாடி

(B) தொப்பி

(C) மீசை

(D) வயிறு.

*விடை :* ______________________

15. நிலத்தை விற்றவர்

(A) நன்னன்

(B) கரிகாலன்

(C) இளநாகன்

(D) பூங்குன்றன்.

*விடை :* ______________________

www.careerindia.com

CAREERINDIA



கோடிட்ட இடங்களைத் தகுந்த விடைகளால் நிறைவு செய்க : 5 × 1 = 5

16. சாயக்கண்டது காய்குலை .................... .

17. வெற்றி உனக்கு முன் .................... எடுத்துப் போகிறது.

18. அடிப்படை இன்பத்தில் தலையாயது .................... இன்பம்.

19. .................... தான் எல்லாத் தீமைகளுக்கும் காரணம்.

20. பெண்ணடிமை தீரும் வரை .................... தீராது.

www.careerindia.com

CAREERINDIA



21. பொருத்துக : 5 × 1 = 5

| | | | |
|---|---|---|---|
| (a) | அவல் | i) | பாவலரேறு பெருஞ்சித்திரனார் |
| (b) | மணல்மேடு | ii) | சுந்தரமுனிவர் |
| (c) | பில்லுக் களஞ்சியம் | iii) | கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை |
| (d) | அரசனாக வேண்டுமெனில் | iv) | பள்ளம் |
| (e) | குலகுரு | v) | சின்னப்பிள்ளை |
| | | vi) | சீவகன். |

*விடைகள் :*

a) ________________

b) ________________

c) ________________

d) ________________

e) ________________



www.careerindia.com

CAREERINDIA



பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***ஒரு*** வாக்கியத்தில் விடை தருக : $10 \times 1 = 10$

22. அலகிலா விளையாட்டுடையவர் யார் ?

23. எந்த ஊக்கம் இனிது ?

24. ஐம்பூதங்கள் யாவை ?

25. கர்நாடகத்தில் தோன்றிய சமயச் சீர்திருத்தவாதி யார் ?

26. செல்லமழை ஏன் பெய்ய வேண்டும் ?

27. ஆனந்தரங்கப் பிள்ளைக்கு எம்மொழிகளில் நல்ல பயிற்சி இருந்தது ?

www.careerindia.com

CAREERINDIA



28. பிள்ளையவர்களின் வருத்தத்திற்குக் காரணம் யாது ?

29. மரக்கிளைகள் தளிர்விட்டு வளர்வதைக் கண்டு திம்மக்கா எவ்வாறு மகிழ்ந்தார் ?

30. அப்பல்லோ பதினொன்றில் சென்றவர்கள் யார் யார் ?

31. அணி என்றால் என்ன ?

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***மூன்று*** வாக்கியங்களில் விடை தருக : 15 × 2 = 30

32. குணங்குடி மஸ்தான் அவர்கள் இறைவனை நோக்கி இயம்புவது யாது ?

www.careerindia.com

CAREERINDIA



33. ஔவையார் எதனை நல்ல நிலமெனக் கூறுகிறார் ?

34. ஆனந்தரங்கப்பிள்ளை அன்புள்ளம் கொண்டவர் என்பதற்குச் சான்று தருக.

35. அந்தணர் தம் மனைவியிடம் மகிழ்ந்து கூறியது யாது ?

36. தீயவழியில் பொருள் ஈட்டியவர் எவ்வாறு துன்புறுகின்றனர் ?

www.careerindia.com

CAREERINDIA



37. பட்டியில் அடைக்கப்பட்ட கால்நடைகளைத் திம்மக்கா எவ்வாறு பேணினார் ?

38. தி ஃபீல் ஆப் ஸ்பேஸ் ( The Feel of Space ) என்ற மன்றத்தில் நேரில் காட்டப்படுவன யாவை ?

39. விடியற்கால நிகழ்ச்சியாக சுந்தரம்பிள்ளையவர்களின் கற்பனையை விவரி.

40. வினையாலணையும் பெயர் என்றால் என்ன ?

www.careerindia.com

CAREERINDIA



41. முதியவராக வந்தவர் வழங்கிய தீர்ப்பு யாது ?

42. அடுக்குத்தொடருக்கும், இரட்டைக் கிளவிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

43. ஒரு நாட்டின் உறுப்புகளாக அமைவன யாவை ?

www.careerindia.com

CAREERINDIA



44. நுணலும் தன் வாயால் கெடும் என்ற பழமொழியை விளக்குக.

45. சோழனின் போர் யானை நாணி புறங்கடை நிற்கக் காரணம் யாது ?

46. இளைஞனின் பெருவலிமையைக் கவிஞர் சிற்பி எவ்வாறு உரைக்கிறார் ?

www.careerindia.com

CAREERINDIA



*குறிப்பு :* பின்வரும் வினாக்களுக்கு இடம் சுட்டிப்பொருள் விளக்குக : 5 × 3 = 15

47. ''எங்களில் ஒருவருக்குக்கூடச் சொந்தமாக வீடு இல்லை''

48. ''அரசே ! எதற்காக இந்த மாறு வேடம் ?''

49. ''அமிர்தமழை மட்டும் விழட்டும்''

www.careerindia.com

CAREERINDIA



50. ''அந்தப் புண்ணியவானிடத்தில் போய் படிக்க அவா இருக்கிறது''

51. ''கட்டுண்டோம்; பொறுத்திருப்போம்; காலம் மாறும்''

பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***ஐந்து*** அல்லது ***ஆறு*** வாக்கியங்களில் விடை தருக :

$4 \times 3 = 12$

52. பாகவதமேள ஆட்டத்தை விளக்கி வரைக.

*அல்லது*

அமெரிக்கர் காலத்தைப் பொன் போன்று போற்றும் இயல்பினர் என்பதற்குச் சான்று தருக.

www.careerindia.com

CAREERINDIA



53. உடம்படுமெய் என்றால் என்ன ? சான்றுடன் விளக்குக.

*அல்லது*

வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.

54. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் எழுதுக.

*அல்லது*

வழு, வழாநிலை — இவற்றை விளக்கிச் சான்று தருக.

www.careerindia.com

CAREERINDIA



55. ஆனந்தரங்கப் பிள்ளையின் தமிழ்ப்பற்றினை விளக்குக.

*அல்லது*

இனிப்பு கலந்த கசப்பு மருந்தை வள்ளுவம் வழங்கியுள்ளது என்பதை விளக்குக.

56. கீழ்க்காணும் பழமொழிகளுள் ஒன்றை மட்டும் விளக்குக. 1 × 3 = 3

அ) காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.

ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்.

இ) யானைக்கு ஒரு காலம் வந்தால், பூனைக்கு ஒரு காலம் வரும்.

www.careerindia.com

அடிபிறழாமல் எழுதுக : 1 × 4 = 4

57. ‘‘காதொளிரும் ........ வாழ்க’’

*அல்லது*

‘‘பெரிய விடமே ........ பழம்’’

www.careerindia.com

CAREERINDIA



பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் ***எட்டு*** வாக்கியங்களில் விடை தருக : 3 × 4 = 12

58. டொல்லுவின் முழக்கத்தையும் ஆட்டக்காரர்களின் திறமையையும் விவரி.

*அல்லது*

திம்மக்காவின் தொண்டினை விவரி.

59. பாரத நாட்டின் சிறப்புகளாகத் திரு. வி. க. கூறுவன யாவை ?

*அல்லது*

செய்ந்நன்றி அறிதல் குறித்து வள்ளுவர் கூறும் கருத்துக்களை எழுதுக.

www.careerindia.com

CAREERINDIA



60. பூங்குன்றன், இளநாகன் வழக்கினை விளக்கி அதற்கு நன்னன் வழங்கிய தீர்ப்பினை எழுதுக.

*அல்லது*

மனோன்மணீயத்தின் கதையைச் சுருக்கி வரைக.

61. பின்வரும் பகுதியைப் படித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக : 4 × 1 = 4

காந்தியடிகள் பள்ளி மாணவனாகத் தேர்வு எழுதிக் கொண்டிருந்தார். அது பொதுத் தேர்வு ! பள்ளி இறுதித் தேர்வு ! தேர்வுத் தாளில் ஒரு கேள்வி : 'தங்கத்தைக் காட்டிலும் உயர்ந்தது எது ?' தங்கம் என்னும் உலோகத்தின் தரம் அவருக்குத் தெரியும் ! அதன் உரமும் அவருக்குத் தெரியும் ! அதை விடச் சிறந்த உலோகம் எது என்றும் பாடத்தில் சொல்லியிருக்கிறார்கள். அந்த விடையும் அவருக்குத் தெரியும் ! என்றாலும் அவர் என்ன விடை எழுதினார் ? 'தங்கத்தைக் காட்டிலும் உயர்ந்தது சத்தியம்' என்று எழுதினார். ஆம். காந்தியடிகளைப் பொறுத்தவரை, சத்தியம் தான் தங்கம் !

*வினாக்கள் :*

1. காந்தியடிகள் என்ன தேர்வு எழுதிக் கொண்டிருந்தார் ?
2. காந்தியடிகளுக்கு எந்த வினாவிற்கான விடை தெரியும் ?
3. காந்தியடிகள் தேர்வில் கேட்கப்பட்ட வினாவிற்கு எழுதிய விடை யாது ?
4. காந்தியடிகளைப் பொறுத்தவரை எது தங்கம் ?

*விடைகள் :*

1. ____________________

2. ____________________

3. ____________________

4. ____________________

www.careerindia.com

CAREERINDIA



62. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்துக் கட்டுரை வரைக : 1 × 5 = 5

i) கணினியின் பயன்பாடு

ii) காடுகளைக் காப்போம்

iii) குழந்தை தொழிலாளர் ஒழிப்பு.

www.careerindia.com

CAREERINDIA



www.careerindia.com

CAREERINDIA



63. நீ வாழும் பகுதியில் உள்ள குப்பைகளை அகற்ற வேண்டி மாநகராட்சி ஆணையருக்கு விண்ணப்ப மடல் ஒன்று வரைக. 5

*அல்லது*

உன் வீட்டில் நடைபெறும் பொங்கல் திருநாளுக்கு உன் நண்பனை / தோழியை அழைத்து ஒரு மடல் வரைக.

www.careerindia.com

CAREERINDIA
www.careerindia.com